**செய்தி வெளியீடு எண்: 748** **நாள்: 02.11.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நீர்நிலைகளில் ஏற்படக்கூடிய விபத்து மற்றும் பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை குறித்து விழிப்புணர்வு முகாம் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது – மதுரையில் (04.11.2019) அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் தொடங்கிவைக்கிறார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி நீர்நிலைகளில் ஏற்படக்கூடிய விபத்து மற்றும் பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை குறித்து விழிப்புணர்வு முகாம் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது. இதன் தொடக்கமாக **04.11.2019** அன்று காலை **10.00** மணியளவில் மதுரை இராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறுகிறது.

முதன்மை செயளாலர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் டி. ஜி. வினய் இ.ஆ.ப. அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் அவர்கள் கலந்து கொண்டு நீர்நிலைகளில் ஏற்படக்கூடிய விபத்து மற்றும் பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை குறித்து விழிப்புணர்வு முகாம் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சி தொடங்கிவைக்கிறார். அதனை தொடர்ந்து **05.11.2019** அன்று திருச்சியிலும், **06.11.2019** அன்று சென்னையிலும் மற்றும் **07.11.2019** அன்று திருவள்ளூரிலும் நடத்தப்படுகிறது.

இம்முகாமில் குளம், குட்டை, ஆழ்துளை கிணறு, பாதாள சாக்கடை, கால்வாய்கள் போன்ற நீர்நிலைகளில் ஏற்படும் விபத்துகள் மற்றும் வெள்ளம், புயல் (அ) சூறாவளி, தீவிபத்து, நிலநடுக்கம், மின்னல் போன்ற பேரிடர்களிலிருந்து தங்களையும், தங்கள் குழந்தைகளையும் பத்திரமாக பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை குறித்து விழிப்புணர்வு குறித்த முகாம் நடைபெறுகிறது.

இந்த ஒத்திகை நிகழ்வில் பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள், கலந்து கொள்கின்றனர். தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்பு படை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு துறை, காவல் துறை, சுகாதாரத் துறை, வருவாய் துறை, தன்னார்வல தொண்டு நிறுவனங்கள், **108** ஆம்புலன்ஸ், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் நேரு யுவகேந்திரா போன்ற துறைகள் தங்கள் துறையின் சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**